**செய்தி வெளியீடு எண்:201** **நாள்: 12.04.2017**

<u>செய்தி வெளியீடு</u>

பயிர் வளர்த்து, உயிர் வளர்க்கும் விவசாயப் பெருமக்களின் வாழ்வு வளம் பெற மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் செயல்படும் இந்த அரசு பல்வேறு முன்னோடி திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

தமிழகத்தில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கும், சிறு/குறு விவசாயிகளுக்கும், வாழ்க்கை முழுவதும் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு, "தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்" என்ற சமூக பாதுகாப்புத் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களால் 15.8.2005 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் உறுதுணையாக இருக்கும் வகையில் புதிய, விரிவுப்படுத்தப்பட்ட, சமூக பாதுகாப்புத் திட்டம் " முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்" என்ற பெயரில் 2011ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்சகளால் அறிமுகப்படுத்தப்பட்டு செயலாக்கத்தில் உள்ளது.

இத்திட்டத்தில் உறுப்பினராக சேர்ந்துள்ள விவசாயிகள் மற்றும் விவசாய குடும்ப உறுப்பினர்களுக்கு கல்வி உதவி, திருமண உதவி, மகப்பேறு உதவித் தொகை, முதியோர் ஊதியம் ஆகியவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த திட்டத்தின் கீழ் விவசாய உறுப்பினராக பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் இயற்கை மரணம் எய்தினால், அவர்களின் குடும்பத்திற்கு உதவும் வகையில், உதவித் தொகையாக ரூ.10,000/– வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் நலனில் அக்கறைக் கொண்டுள்ள மாண்புமிகு அம்மாவின் வழி நடக்கும் இந்த அரசு, முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இயற்கை மரணத்திற்காக வழங்கப்படும் உதவித் தொகையை ரூ.10,000/–லிருந்து ரூ.20,000/– ஆக உயர்த்தி வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் உத்தவிட்டுள்ளார்கள்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**